# ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டம்!



நெல்லை கிழக்கு மாவட்டம் மற்றும் மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவாக பேசிய ஒன்றிய அரசு உள்துறை அமைச்சர் அமித்ஷா வை கண்டித்து வண்ணார் பேட்டையில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன் கான் ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.நிகழ்வில் அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. மாலை ராஜா, ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், விஜிலா சத்யானந்த், சித்திக், சரவணன், தர்மன், சுரேஷ், கிரிஜா குமார், கருப்பசாமி கோட்டையப்பன், முருகன், ஆ.க.மணி, அருள்மணி, ராஜ், உலகநாதன், கந்தன், மீரான் மைதீன், அனிதா, அண்ணாதுரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



அண்ணல் அம்பேத்கரை இழிவு செய்த அமித்ஷாவைக் கண்டித்து சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி இளையான்குடி கண்மாய் கரையில் இளையான்குடி வடக்கு ஒன்றியச் செயலாளர் சுப.மதியரசன் தலைமையில் பேரூர்ச் செயலாளர் பி.ஏ.நஜ்முதீன், ஆறு. செல்வராசன், கா.வெங்கட்ராமன், வே.தமிழ்மாறன் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டி ஒன்றியம் கீரனூர்பேரூராட்சியில் அம்பேத்கரை இழிவு படுத்தி பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் தொப்பம்பட்டியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர்கள், சுப்பிரமணியன், பொன்ராஜ், பேரூர் செயலாளர் அன்பு (எ) காதர்பாட்ஷா, கீரனூர் பேரூராட்சி தலைவர் கருப்புசாமி, துணைத் தலைவர் ஹாஜி அப்துல் சுக்கூர் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர். திண்டுக்கல் மாவட்டம் கீரனூரில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இந்திய அரசியலைமப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை, புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து பரமக்குடி நகர் திராவிட முன்னேற்றக்கழகம் சார்பில் பரமக்குடி பேருந்து நிலையம் முன்பாக பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன் தலைமையிலும் முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ் சுந்தர்ராஜன், முன்னிலையிலும் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, மாவட்டத் துணைச் செயலாளர் கே.கருப்பையா, நகர் செயலாளர் ஜீவரத்தினம், மற்றும் கட்சி நிர்வாகிகள் நகர்மன்ற உறுப்பினர்கள் நகர் கழக பொறுப்பாளர்கள் கிளைக்கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்றனர்.



புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களை இழிவாக பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்துவடக்கு மாவட்டம் தேனி பழைய பஸ் நிலையம் அருகில் பெரியகுளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 7, 8 – இல் ஏழு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி கீழ்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 20.12.2024 வெள்ளிக்கிழமை | மாலை 4.00 மணி | 7 | சீர்காழி | ஏ.ஆர்.எம். மஹால், பைபாஸ் சாலை, சீர்காழி. |
| 21.12.2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | | பட்டுக்கோட்டை | குமரன் திருமண மஹால், முத்துப்பேட்டை சாலை, பட்டுக்கோட்டை. |
| | மாலை 4.00 மணி | | அறந்தாங்கி | நூர் மஹால், கட்டுமாவடி சாலை, அறந்தாங்கி, புதுக்கோட்டை. |
| 20.12.2024 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | 8 | மானாமதுரை | அனுசுயா மஹால், மானாமதுரை. |
| | மாலை 4.00 மணி | | சிவகங்கை | மாஷா மஹால், அரண்மனை வாசல், சிவகங்கை. |
| 21.12.2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | | திருப்பத்தூர் | காந்திமதி மஹால், சிங்கம்புனரி, சிவகங்கை. |
| | மாலை 4.00 மணி | | காரைக்குடி | அபூர்வா மஹால், காரைக்குடி |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 18-12-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



இனமானப் பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை வண்ணாரப்பேட்டை யில் உள்ள அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இனமானப் பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் மேயர். ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், மாவட்ட அவைத் தலைவர் முருகன், வழக்கறிஞர் தினேஷ் மாநகர துணைச் செயலாளர் பிரபு பாண்டியன், தச்சை மண்டல தலைவர் ரேவதி பிரபு, மானூர் ஒன்றிய செயலாளர் அன்பழகன், வட்ட செயலாளர் மாரிமுத்து, மாமன்ற உறுப்பினர்கள் கந்தன், பேச்சியம்மாள், சுதாமூர்த்தி, சின்னத்தாய் கிருஷ்ணன், சபி அமீர்பாத்து, மன்சூர், மாரியப்பன், அலி சேக் மன்சூர், சுப்பிரமணியன், டாஸ்மாக் அரசன் ராஜ், மூன் மசூது, சுபஹாணி, வல்லநாடு முத்து சுண்ணாம்பு மணி, சாமுவேல், கவிஞர் மூர்த்தி, தகவல் தொழில் பணி காசிமணி,நெசவாளர் அணி ரகுமான், டவுன் ஷேக் பிள்ளை, அக்பர், சுந்தரம், முகம்மது கமாலுதீன், சுடலைக்கண்ணு உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதியில் செல்லம்பட்டி திடியன் கிராம பொதுமக்கள் 2500 அடி உயரமுள்ள திடியன் மலை உச்சத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக குடிநீர் ஏற்றக் கூடிய பம்பு செட் மோட்டார் அமைத்துத் தரும்படி கோரிக்கை வைத்தனர. அதனை ஏற்று மதுரை தெற்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் இள.மகிழன் தனது சொந்த செலவில் கோவையிலிருந்து வாங்கபட்ட அதிதிறன் கொண்ட சிறப்பு புதிய பம்புசெட் மோட்டாரை வழங்கினார்.